திரு. மீ. கலியாணசுந்தரம்: இந்தச் சட்டம் நிறைவேற்றிய பிற்பாடு ஒரு வருஷத்திற்கு மேல் ஆகியும், விதிகள் இயற்று வதற்கு இவ்வளவு காலதாமதம் ஆவதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: ரொம்ப நல்ல முறையிலே, நுணுக்கமான முறையிலே சட்டத்தை அணுக வேண்டிய சிரமங்கள் இருக்கின்றன. அதற்கு விதிகள் இயற்றுவது பற்றி நல்ல முறையில் பரிசிலனை நடந்துகொண்டிருக்கிறது. அநேகமாக அது முடிவுக்கு வரும் நிலையில் இருக்கிறது. ஆகவே கூடிய சீக்கிரம் விதிகள் அமுலுக்குக் கொண்டுவரப்படும்.

கூட்டுறவு விவசாய பாங்குகள்

*1088 கேள்வி.—**திரு. டி. கார்ச்சா கவுடர்:** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

கூட்டுறவு விவசாய பாங்குகளை ஆரம்பிக்க உத்தேச முண்டா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: இல்லை, ஐயா.

திரு. டி. கார்ச்சா கவுடர்: தமிழ் நாட்டில் இன்று இருக்கும் கிராம கூட்டுறவு சங்கங்களைவிட விவசாய பாங்குகள் செவ்வனே நடைபெற்று வருவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படி யிருந்தால், மத்திய அரசாங்கத்தினிடம் மீண்டும் வற்புறுத்தி, தமிழ் நாட்டில் விவசாய கூட்டுறவு பாங்குகள் அமைக்க அரசாங்கம் ஏதாவது முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: நமது தமிழ் நாட்டில் இப்பொழுது 330 விவசாய பாங்குகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதற்குமேல் அதிகப்படுத்தப்போவதில்லை. முதலில் மத்திய அரசாங்கம் விவசாய பாங்குகள் அமைக்கவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டார்கள். ஆனல் இப்பொழுது அப்படிச் செய்யத் தேவையில்லை என்று கருதி அதற்கு மேல் அதிகமாக விவசாய பாங்குகள் ஏற்படுத்த வேண்டாம் என்று நிறுத்திவிட்டு, கிரெடிட் சொஸைடிகளாக மாற்றிக்கொண்டு வருகிறோம்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: விவசாய பாங்குகள் நல்ல முறை யிலே வேலை செய்து விவசாயிகளுக்கு உதவுகின்ற காரணத்தினல், மேலும் சில பாங்குகளாகிலும் திறக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன். அப்படி திறக்கிற சமயத்தில் பண்ருட்டியில் ஒரு விவசாய பாங்கு ஏற்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்: இப்பொழுது விவசாய பாங்குகள் எங்குமே திறக்கப் போவதில்லை என்று நான் முதலில் சொன்னேன். அதை கனம் அங்கத்தினர்

2nd November 1962]

அவர்கள் புரிந்துகொண்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். இனி மேல் வரக்கூடிய எல்லா சொஸைட்டிகளும் விவசாய பாங்குகள் என்னென்ன வேலைகள் செய்யுமோ அந்த வேலைகளையும் செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. பி. பழனிப்பிள்ளை : எந்தக் காரணத்தைக் கொண்டு இனி மேல் விவசாய பாங்குகளை ஏற்படுத்தவேண்டாம் என்று மத்திய சர்க்கார் கூறினார்கள் என்று கனம் அமைச்சர் அவர்கள் விளக்கு வார்களா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : சொஸைடிகளாக இருந்தால் உள்ளூரில் இருக்கக்கூடிய மெம்பர் களோடு அதிக தொடர்பு வைத்துக்கொள்ளலாம் என்று கருதி, விவசாய பாங்குகளைவிட இம்மாதிரி லிமிடெட் ஏரியாவை கவர் பண்ணக்கூடிய சொஸைட்டிகள் அமைக்கும் முறை நல்லது என்று சர்க்கார் எண்ணுகிறார்கள்.

திரு. டி. கார்ச்சா கவுடர் : இப்பொழுது மேத்தா கமிட்டியின் அறிக்கையின்படி 3,000 ஜனத்தொகையுள்ள கிராமங்களுக்கு மட்டும்தான் கூட்டுறவு சங்கங்கள் புதிதாக அமைக்கவேண்டு மென்று இருக்கிறது. சுமார் 1,000 பேர்களுக்குள்ளாக இருக்கும் கிராமங்களிலும் கூட்டுறவு சங்கங்களை அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. ந. நல்லசேனபதி சர்க்கரை மன்றாடியார் : அந்த வகையிலும் அரசாங்கம் யோசனை செய்து கொண்டிருக் கிறது.

கேளிக்கை வரி

*1089 கேள்வி.—**திரு. மு. கருணாநிதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

1961-ம் ஆண்டில் சினிமா தியேட்டர்கள், டூரிங் சினிமாக்கள் மூலம் கிடைத்த வரியின் மொத்தத் தொகை எவ்வளவு ?

THE HON. SRI R. VENKATARAMAN : The total amount of entertainments and show taxes collected during the year 1961 are Rs. 1,71,35,293 in respect of permanent theatres and Rs. 45,84,120 in respect of touring cinemas.

திரு. மு. கருணாநிதி : மேலும் அதிகமாக வரி விதிக்கலாம் என்று சிபாரிசு செய்யப்பட்டுள்ள உத்தரவு, எத்தனை நகராட்சி மன்றங்களிலும், பஞ்சாயத்துக்களிலும் அமல் செய்யப்பட்டு வருகிறது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இதற்கு தனிக் கேள்வி போடவேண்டும். அது வேறு இலாகாவைச் சேர்ந்தது.